தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப.

தொழில்நுட்பக் கல்வி ஆணையர்.

*******

003605
04 OCT 2024

BR 4/10 A 2024

**செயல்முறை ஆணை எண். 23017/டி2/2024-2, நாள். 27 .09.2024**

பொருள்: நிருவாகம் – தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-II(Group-II A (Non-Interview)– உதவியாளர்கள் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – பணி நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக

பார்வை: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.1089/PSDA2/2024, நாள் 25.06.2024

*****

தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி-II-ன் (Group-II A (Non-Interview)கீழுள்ள உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய போட்டித் தேர்வினில் தேர்ச்சி பெற்று இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட உதவியாளர்களின் பெயர் பட்டியல் பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. அப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நபர் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 17(1)-ன் கீழ் (தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகளுக்கான பொது விதி 10(a) (i)-ன் கீழ்)ரூ. 20,600 - 75900 என்ற திருத்திய ஊதியக் கட்டில் (Level-10) (ரூ.5200- 20200 + தர ஊதியம் ரூ.2800 (Pay Band 1) என்ற முந்தைய ஊதியக் கட்டில்) ரூ. 20,600/- என அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்து முற்றிலும் தற்காலிக அடிப்படையில் உதவியாளராக நியமனம் செய்யப்படுவதுடன் அவரது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரியில் பணியிடம் வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | பணியிடம் வழங்கப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | Ramasubramaniyan. M<br>1/245 North Street,<br>Vadakarai Village,<br>Vembakkottai Taluk<br>Virudhunagar District<br>Tamil Nadu<br>Pincode-626136 | அரசினர் பொறியியற் கல்லூரி,<br>பர்கூர்-635 104,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் |

மேற்கண்ட நபர் பணியில் சேர்வதற்கு முன்னதாக அரசு குடிமை மருத்துவரிடமிருந்து (Government Civil Surgeon) உடல் தகுதிச் சான்று (Physical Fitness Certificate) பெற்று அவர் பணியேற்க உள்ள கல்லூரி முதல்வரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவரின் கவனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 17(5)- (தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 10 (a)-ன் கீழுள்ள விதி (V)) -இன் பால் ஈர்க்கப்படுகிறது.

மேலும் இவரது கவனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 7(5) (தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதித் தொகுதியின் கீழ்வரும் பொதுவிதி 4(e)) –இன் பால் ஈர்க்கப்படுகிறது. அதன்படி மேற்கண்ட நபர் 17.10.2024–க்குள் பணியிடம் வழங்கப்பட்ட கல்லூரியில் பணியேற்க வேண்டும். பணியேற்க கால அவகாசம் நீட்டித்து கோரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது. மேலும் பணியிட மாற்றம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது. குறிப்பிட்ட நாளுக்குள் தெரிவாளர் பணி ஏற்கவில்லையெனில் தனியரது பெயர் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து நியமன அலுவலர் நிலையில் நீக்கம் செய்யப்பட்டு, அதன் விவரம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்படும்.

இத்தற்காலிக நியமனம், தெரிவாளர் தேர்வாணையத்திற்கு அளித்துள்ள விண்ணப்பங்களின் விவரங்களின் அடிப்படையிலான உரிமையில் வழங்கப்படுகிறது. (Based on the claim made in his/her Application for said recruitment) அது தவறு எனத் தெரியவரும்பட்சத்தில், தெரிவாளரின் இத்தற்காலிக பணிநியமனம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

மேலே பணி நியமனம் செய்யப்பட்டவர், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தனது பெயர் பதிவு செய்யப்பட்ட பதிவு அட்டையினை அலுவலகத் தலைவரிடம் பணியேற்கும் போது தவறாமல் ஒப்படைக்க வேண்டும்.

இந்த நியமன ஆணை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தெரிவிக்கப்பட்ட கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டதாகும்.

> "The regularization is subject to the outcome of the W.A (MD)No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of Madras High Court relating to this recruitment"

Appointment, Training and Conditions of Service of Directly Recruited Assistants (Non – Technical) in the Technical Education Department

- Every person appointed as Assistant by direct recruitment shall be on probation for a total period of two years on duty within a continuous period of three years.

- Every person appointed as Assistant by Direct recruitment shall, within the period of probation:-

    a) Complete the Foundational Training for a period of two months at Civil Services training Institute, Bhavanisagar; and

    b) Pass the Account Test for Subordinate Officers, Part-I and Tamil Nadu Government Office Manual Test.

- Consistent with his seniority, a directly recruited Assistant shall be eligible for promotion to any selection category posts provided he/she has successfully completed his/her probation and has also passed the prescribed tests.

- The directly recruited Assistant shall be allowed straightaway to draw the minimum of the time scale of pay applicable to the post of Assistant. The training period shall be allowed to count for increment and for probation.
- Every person appointed as Assistant by direct recruitment shall execute a bond in proper form with two sureties binding himself/herself:-

    i) agreeing to serve in the Technical Education Department for a period of not less than five years; and

    ii) in case, he/she fails to serve as aforesaid, to refund to the State Government the total amount drawn by him/her as pay and allowances during the period of training.

ஒம்/–த. ஆபிரகாம்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
Ramasubramaniyan. M
1/245 North Street
Vadakarai Village
Vembakkottai Taluk
Virudhunagar District
Tamil Nadu
Pincode-626 136

நகல்

1. முதல்வர், அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி (தனியர் பணியில் சேர்ந்த விவரத்தினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது)
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3
3. சம்பந்தப்பட்ட கருவூல / துணைக் கருவூல அலுவலர்கள்
4. ஆணையரின் மேஜைக்கு
5. உதவி இயக்குநர் (நிருவாகம்) (பொ. )
6. இயக்குநரின் நேர்முக உதவியாளர்
7. டி2/இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவி இயக்குநர்(நிருவாகம்)(பொ.)

<u>தொழில் நுட்பக் கல்வித் துறை</u>

அனுப்புநர்
முனைவர்.ஜே . நபீசா பேகம் , M.E., Ph.D.
முதல்வர்(மு.கூ.பொ),
அரசினர் பொறியியற் கல்லூரி,
பர்கூர் – 635104.

பெறுநர்
ஆணையர் ,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் ,
கிண்டி , சென்னை- 600 025.

<u>கடித எண்: 3605/ நி2 / 2024</u>    <u>நாள்: 18.10.2024</u>

ஐயா,

பொருள்: நிர்வாகம் - அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் - திரு. மு. ராமசுப்பிரமணியன் மற்றும் திரு. சி. ஆனந்த் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி – II (Group – II A) (Non - Interview) – உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பணி நியமன ஆணை வழங்கியதில் - பணியில் சேர்ந்த விவரம் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை:
1) தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 23017/டி.2/2024 – 2, நாள்: 27.09.2024.
2) தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 23017/டி.2/2024 – 6, நாள்: 27.09.2024.
3) திரு. மு. ராமசுப்பிரமணியன், உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள்: 10.10.2024.
4) திரு. சி. ஆனந்த், உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள்: 14.10.2024.
5) இக்கல்லூரி முதல்வரின் கடிதம் எண். 3605/நி2/2024, நாள்: 09.10.2024.

-------

பார்வை (5)-ல் காணும் கடிதத்தின் தொடர்ச்சியாகவும் மற்றும் பார்வை (1) மற்றும் (2)-ல் காணும் தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணையின்படியும், இப்பொறியியற் கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உதவியாளர்கள் கீழ்க்காணும்படி பணியில் சேர்ந்துள்ளார்கள் என்ற விவரம் ஆணையர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு. மு. ராமசுப்பிரமணியன்,<br>உதவியாளர் | 10.10.2024<br>முற்பகல் |
| 2 | திரு. சி. ஆனந்த்,<br>உதவியாளர் | 14.10.2024<br>முற்பகல் |

18/X/2024

முதல்வர்(மு.கூ.பொ)க்காக.

18/10/24